# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM I

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

8069849

C

1. District மாவட்டம் : திருப்பூர் PS: காவல்நிலையம் : ஊ.த.க பிரிவு Year ஆண்டு : 2021 FIR No.: மு.த.அ. எண் : 05/AC/2021 Date நாள் : 01.12.2021

2. (i) Act சட்டம்: The Prevention of corruption Act 1988 as amended in 2018 Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை : 24.11.2021 at 12.10 PM and
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை : 29.11.2021 at 01.15 PM
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : நேரம் : 01.12.2021 at 9.30 AM
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : வாய்மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : திருப்பூர் மாவட்ட வன அலுவலகம், சமூக காடுகள் மற்றும் விரிவாக்க கோட்ட அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள மேட்டூர் மண்வள பாதுகாப்பு திட்ட கோட்ட அலுவலகம். சுமார் 4 கி.மீ தெற்கு
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : திரு.G.முருகன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் : திரு. கோவிந்தசாமி
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு : 58/2021 (d) Nationality : நாட்டினம் : இந்திய (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் : –
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் : ஒப்பந்தக்காரர் (g) Address : முகவரி : கதவு எண்:71, பழைய எண்.76(A)-1, ராஜா ராவ்நகர் ரோடு, வார்டு எண்:26, திருப்பூர் டவுன், திருப்பூர் தாலுக்கா & மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. பழனிச்சாமி, உதவியாளர், மேட்டூர் மண்வள பாதுகாப்பு திட்ட கோட்ட அலுவலகம், திருப்பூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   தாமதம் இல்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

விவரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ......—...... Rank ......—...... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ......—......on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] [signature] 01.12.21

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
01.12.2021 At 15.15 Hrs

Name: பெயர் P. PALANISAMY
Rank: நிலை INSPECTOR OF POLICE, V&AC, DHARMAPURI.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

[signature] 01/12/21
SI, V&AC, DPI.

தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.5/AC/2021, u/s 7 (a) of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி .

******

இன்று 01.12.2021 ஆம் தேதி காலை 09.30 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்தில் இருந்தபோது தருமபுரி மாவட்டம், தருமபுரி டவுன், சாலை விநாயகர் ரோடு, வார்டு எண்.26, புதிய எண்.71, பழைய எண்.76(A)–1 என்ற முகவரியைச் சேர்ந்த கோவிந்தசாமி மகன் திரு.G.முருகன், வயது 58, என்பவர் அலுவலகம் வந்து வாய்மொழியாக கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு.

******

நான் தருமபுரி மாவட்டம், தருமபுரி டவுன், சாலை விநாயகர் ரோடு, வார்டு எண்.26, புதிய எண்.71, பழைய எண்.76(A)–1 என்ற முகவரியில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் டெய்லர் தொழில் செய்து வருகிறேன். நான் 6– ம் வகுப்பு வரை படித்துள்ளேன். படிக்க தெரியும், சரியாக எழுத வராது. எனது உடன்பிறந்த சகோதரியான திருமதி.சென்னம்மாள் என்பவரை திரு.சின்னச்சாமி என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்திருந்தோம். எனது அக்காவின் வீட்டுக்காரர் திரு.சின்னசாமி தமிழ்நாடு வனத்துறையில் 1955–ல் பணியில் சேர்ந்து கடைசியாக வனக்காவலராக 30.06.1990–ல் தருமபுரியிலுள்ள மேட்டூர் மண்வள பாதுகாப்பு திட்ட கோட்ட அலுவலகத்திலிருந்து பணிஓய்வு பெற்றார். அதன் பின்பு, பென்சன் பெற்று வந்த அவர் கடந்த 08.03.2007–ல் உடல் நலக்குறைவால் இறந்துவிட்டார். அதன் பின்னர், அவரது பென்சனை பெறுவது தொடர்பாக முதல் மனைவியான எனது அக்கா சென்னம்மாளுக்கும், இரண்டாவது மனைவியான திருமதி.கந்தம்மாளுக்கும் பிரச்சனை ஏற்பட்டது. எனது அக்காவிற்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தாலும், அவர்கள் வீட்டில் ஆண்கள் யாருமில்லாத காரணத்தால், நான் உடன் பிறந்த தம்பி என்ற முறையில் அப்போதிருந்து நான் எனது அக்காவிற்காக எனது மாமாவின் பென்சனை வாங்கி எனது அக்காவிற்கு கொடுப்பது தொடர்பாக, எனது மாமா சின்னசாமி அவர்கள் பணிசெய்த அலுவலகத்திற்கு சென்று அந்த பணிகளை கவனித்து வந்தேன். எனது அக்காவிற்கும், கந்தம்மாள் அவர்களுக்கிடையே ஏற்பட்ட சுமூக பேச்சுவார்த்தையால் பென்சன் பணத்தை எனது அக்கா திருமதி.சென்னம்மாள் அவர்களே பெற்றுக்கொள்ள என்று முடிவானது. அதன்படி எனது அக்கா சென்னம்மாள் பெயரில் குடும்ப ஓய்வூதியம்

வழங்க அனுமதித்து மாநில தலைமை கணக்காயர் அலுவலக எண். P32/2/13215709/ PPO NO.D3215709 நாள்.30.05.2017–ன்படி குடும்ப ஒய்வூதிய அங்கீகார கடிதம் வழங்கப்பட்டது. அந்த அங்கீகார கடிதத்தில் 10.06.2010 முதல் 100 சதவீத குடும்ப ஒய்வூதியத்தை எனது அக்கா சென்னம்மாளுக்கு வழங்கிட உத்தரவாகியிருந்தது. இதன்பின்பு 10.06.2010 முதல் 31.10.2017 வரையிலான காலத்திற்கு குடும்ப ஒய்வூதிய நிலுவைத்தொகை கணக்கிடப்பட்டு ரூ.5,99,465/– நிலுவைத்தொகையாக வழங்கிட ஆணையிடப்பட்டிருந்தது. அந்த தொகையானது, எனது அக்கா சென்னம்மாளுக்கு கடந்த 02.11.2017–ல் வழங்கப்பட்டது. குடும்ப பென்சன் பெற்று வந்த எனது அக்கா சென்னம்மாள் 29.03.2019–ல் இறந்துவிட்டார். இறப்பிற்கு முன் அவரது வாழ்நாள் கால நிலுவைத்தொகையை பெற வாரிசுதாராக அவரது மகள் சாந்தியை நியமித்து உள்ளார். அதற்கான பதிவை 02.11.2017–ல் தர்மபுரி கருவூல அலுவலர் குடும்ப ஒய்வூதிய அங்கீகார கடிதத்தில் எழுதி சான்றொப்பம் செய்துள்ளார். எனது அக்கா 2019 ல் இறப்பதற்கு சுமார் 10 நாட்களுக்கு முன்பு தருமபுரி மாவட்ட வன அலுவலகம், சமூக காடுகள் மற்றும் விரிவாக்க கோட்ட அலுவலகத்தில் அமைந்துள்ள மேட்டூர் மண்வள பாதுகாப்பு திட்ட கோட்ட அலுவலகத்திலிருந்து ஒரு தபால் வந்தது. அதில் 2007 முதல் 2010 வரையிலான காலத்திற்கு வழங்கப்படாமல் நிலுவையில் உள்ள குடும்ப ஒய்வூதிய பணத்தை பெறுவது தொடர்பாக ஆவணங்களை சமர்பிக்குமாறு கூறப்பட்டிருந்தது. எனது அக்கா உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் நான் தருமபுரியில் உள்ள மேட்டூர் மண்வள பாதுகாப்பு திட்ட கோட்ட அலுவலகத்திற்கு சென்று அங்கிருந்த உதவியாளர் திரு.பழனிச்சாமி அவர்களை சந்தித்து விவரங்களை கேட்டு வந்தேன். அவரும் சில ஆவணங்களை தயார் செய்து கொண்டு வருமாறு அறிவுறுத்தினார். அதன்பின் எனது அக்கா இறந்துவிட்டதால் குடும்ப ஒய்வூதியம் பெறுவது தொடர்பாக அந்த அலுவலகத்திற்கு நான் சில நாட்கள் செல்லவில்லை. அதன்பின்பு சுமார் 3 மாதங்களுக்கு முன்பு நிலுவை பணம் பெறுவது தொடர்பாக, உதவியாளர் திரு.பழனிச்சாமி அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்து விவரங்களை கேட்டபோது, தற்போது உங்களது அக்கா இறந்துவிட்டதால் அவரது பெயரில் நிலுவை தொகையை பெற்றுத் தர முடியாது. எனவே அவரது வாரிசுதாரரான திருமதி.சாந்தி அவர்களின் பெயரில் நிலுவைத் தொகையை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கிறேன் அது தொடர்பான ஆவணங்களை கொண்டுவாருங்கள் என்றார். எனது அக்கா மகள்

திருமதி.சாந்தி உடல்நிலை சரியில்லாதவர், அவரால் அடிக்கடி அலுவலகத்திற்கு அலைய முடியாது எனவே சீக்கிரமாக நிலுவை பணத்தை பெற்றுதர நடவடிக்கை எடுங்கள் என்று கூறினேன். அதனை கேட்ட உதவியாளர் திரு.பழனிச்சாமி, நீங்கள் தான் ஏற்கனவே வாங்கித் தந்த நிலுவை தொகைக்கு ஒன்றும் கவனிக்காமல் போய்விட்டீர்கள், அதனால் இந்த முறை சீக்கிரமாக வேலை முடியாமல் உள்ளது பின்னர் வாருங்கள் பார்க்கலாம் என்று கூறி அனுப்பிவிட்டார். அதன்பின்பு கடந்த 24.11.2021 ம் தேதி பகல் சுமார் 12.10 மணிக்கு உதவியாளர் திரு.பழனிச்சாமி அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்து விபரங்கள் கேட்டேன். அதனை கேட்டுக்கொண்ட உதவியாளர் திரு.பழனிச்சாமி என்னிடம், சின்னச்சாமி 2007–ல் இறந்த பின்பு 2007 முதல் 2010 வரையிலான 4 வருட காலத்திற்கு பென்சன் தொகை பெற்றுத்தரப்படாமல் நிலுவையில் உள்ளதாகவும், அந்த தொகையை பெறவேண்டுமென்றால் ரூ.34,410/– ஐ ஆடிட்டர் அலுவலகம் மூலமாக வருமானவரியாக செலுத்தினால்தான் குடும்ப ஓய்வூதிய நிலுவைத்தொகையை பெறமுடியும் என்றார். அதற்கு ஏன் சார் அவ்வளவு பணம் கேட்கிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் அந்த பணம் வருமானவரியாக செலுத்தப்பட வேண்டும் என்று கூறினார். அவரது பதிலில் தெளிவு இல்லாததாலும், அந்த பணத்தை வருமானவரியாக செலுத்தவேண்டும் என்ற காரணத்தை கூறி லஞ்சமாக கேட்கிறார் என்று நினைத்து கொண்டு திரும்பி வந்துவிட்டேன். அதன்பின்னர் எனக்கு தெரிந்த சிலரிடம் கேட்டபோது ஓய்வூதிய நிலுவைத் தொகை பெறுவதற்கு வருமானவரியெல்லாம் செலுத்த தேவையில்லை என்று கூறினார்கள். பின்னர் 29.11.2021 மதியம் சுமார் 1.15 மணிக்கு மறுபடியும் தருமபுரி மாவட்ட வன அலுவலகம், சமூக காடுகள் மற்றும் விரிவாக்க கோட்ட அலுவலகத்தில் அமைந்துள்ள மேட்டூர் மண்வள பாதுகாப்பு திட்ட கோட்ட அலுவலகத்திற்கு சென்று உதவியாளர் திரு.பழனிச்சாமி அவர்களை சந்தித்து பணத்தை தயார் செய்ய முடியாதது பற்றி கூறினேன். மேலும் அவரிடம் ஏற்கனவே 2010 முதல் 2017 வரையிலான காலத்திற்கு குடும்ப ஓய்வூதிய நிலுவைத்தொகை பெற்றதற்கு வருமானவரி எதுவும் செலுத்தவில்லை என்று கூறினேன். அதனைக்கேட்ட உதவியாளர் திரு.பழனிச்சாமி அவர்கள் ஏற்கனவே அதிக நாட்கள் ஆகிவிட்டது, விருப்பம் இருந்தால் இந்த வாரம் புதன் அல்லது வியாழக்கிழமைக்குள் பணம் ரூ.34,410/–ஐ ரெடி செய்து கொண்டு வந்து என்னை சந்தியுங்கள் குடும்ப ஓய்வூதிய நிலுவை கோப்பை தயார் செய்து AG அலுவலகத்திற்கு

அனுப்பி பணத்தை பெற்றுத்தந்துவிடுவேன் என்று சொன்னார். அவர் கேட்ட பணம் ரூ.34,410/– ஐ கொடுக்காவிட்டால் நிலுவைப்பணம் தொடர்பான கோப்பை அனுப்பமுடியாது என்றும், இரண்டு மூன்று வருடத்திற்கு அப்படியே கிடப்பில் போட்டுவிடுவேன் என்றும் கூறினார். வருமானவரி என்ற பெயரில் உதவியாளர் திரு.பழனிச்சாமி அவர்கள் கேட்ட லஞ்ச பணத்தை கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே 2007 முதல் 2010 வரையிலான காலத்திற்குரிய குடும்ப ஓய்வூதிய நிலுவைத்தொகையை பெற்றுத்தர வருமான வரி செலுத்தவேண்டும் என்ற பெயரில் லஞ்சமாக கேட்கும் தருமபுரி மாவட்ட வன அலுவலகம், சமூக காடுகள் மற்றும் விரிவாக்க கோட்ட அலுவலகத்தில் அமைந்துள்ள மேட்டூர் மண்வள பாதுகாப்பு திட்ட கோட்ட அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரியும் திரு.பழனிச்சாமி என்பவர் மீது விசாரித்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். படித்து பார்த்தேன். நான் சொன்னபடி சரியாக இருந்தது. ஒப்பம் G.முருகன், **01.12.2021** Sir, The oral statement of the informant was recorded by me in the office computer on 01.12.2021 between 09.30 hrs and 10.30 hrs and read it over to him which is admitted to be correct. Further, a confidential verification on the general reputation of the accused and whether the informant has motive with him personally, was verified and found that the reputation of accused is learnt to be not good and nothing adverse against the informant and the information given in his statement is genuine. Therefore, a case in Dharmapuri Cr.No. 05/AC/2021, u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 (Central Act 16 of 2018) was registered today 01.12.2021 at 12.35 hrs against the accused. The original FIR and the statement of the informant is sent to the Hon'ble Court of Special Judge cum Chief Judicial Magistrate, Dharmapuri and remaining copies are sent to the officers concerned.

01/12/21

**(P.PALANISAMY)**
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Dharmapuri.